# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.39/2019 நாள். 31.01.2019

## தனி அலுவலர் அவர்களின் ஜனவரி 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

31.01.2019ம் நாள் வியாழன்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஜனவரி 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஜனவரி 2019 | 0 | 0 | 10 | 4 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜனவரி 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

அனகாபுத்தூர் நகராட்சியின் பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் பொது பிரிவில் 2019-2020ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும், செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| | | |
| 1 | வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 |
| 2 | வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 |
| 3 | அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், இரசீது புத்தகங்கள், கணிணி பொருட்கள் மற்றும் | 9.90 |

| | | |
|---|---|---|
| | இதர பொருட்கள் அச்சடித்து வழங்குதல். | |
| 4 | குடிநீர் டேங்கர் லாரிக்கு ஓட்டுநர் 2 நபர்கள் மற்றும் துலக்குநர் 2 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் சப்பை செய்தல் | 7.00 |
| 5 | பொது சுகாதார தளவாட பொருட்கள் வார்டு எண்.1 முதல் 9 வரை விநியோகம் செய்தல் | 9.90 |
| 6 | பொது சுகாதார தளவாட பொருட்கள் வார்டு எண்.10 முதல் 18 வரை விநியோகம் செய்தல் | 9.80 |
| 7 | தற்காலிகமாக குடிநீர் சேமிப்பு தொட்டிகள் அமைத்தல் | 9.80 |
| 8 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கை மின் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 9.80 |
| 9 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 13 எண்ணிக்கை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிப்பு பணி செய்தல் | 7.50 |
| 10 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் மற்றும் கைப்பம்பினை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான ஆட்களை சப்ளை செய்தல் | 9.50 |
| 11 | அரசு பள்ளிகளின் கழிவறைகள் பராமரிப்பு பணிகள், துப்புரவு பணிகள் செய்ய பணியாளர்களை சப்ளை செய்தல் மற்றும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் பணி | 9.90 |
| 12 | தட்டச்சு, ஜெராக்ஸ் பிரதிகள், போட்டோ மற்றும் வரைப்படம் தயாரித்தல் | 2.50 |
| 13 | நகராட்சி பகுதிகளில் உள்ள 117 எண்ணிக்கையிலான கைப்பம்பினை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான உதிரிபாகங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற டான்சி நிறுவனத்தில் கொள்முதல் செய்தல் பணி | 5.00 |
| 14 | பொது சுகாதார பிரிவிற்கு பெரிய புகை அடிக்கும் இயந்திரம் வாங்குதல் பணி | 7.00 |
| 15 | புகை அடிக்கும் இயந்திரம் பொருத்தி பயன்படுத்த தேவையான இலகுரக வாகனம் வாங்குதல் பணி | 6.00 |

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண். 4</u>

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு டாடா ஏஸ் வாகனம் தனியார் மூலம் வாடகை அடிப்படையில் தி வாலாஜாபேட்டை அக்ரோ இன்ஜுனியரிங் சர்வீஸ் கோ ஆப்ரேடிவ் சென்டர் நிறுவனம் மூலம் 2018 –2019ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ஒப்பந்த காலம் 31.03.2019ம் தேதியன்று முடிவடைகிறது. எனவே கடந்த ஆண்டு விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் மேற்படி பணிக்கு புதிய வாகனம் வாங்கும் வரை கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.5</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சொத்து வரி , குடிநீர் வரி , தொழில் வரி , கடை வாடகை , D&O லைசன்ஸ் மற்றும் குத்தகை வரி போன்ற வரி இனங்களை நிலுவையின்றி உடனடியாக செலுத்தக்கோரி அறிவிப்பு செய்யவும் வாடகை அடிப்படையில் ஆட்டோ (ஓட்டுநர் ஊதியம், எரிபொருள், ஒலிபெருக்கி மற்றும் ஆம்பிளிபையர் உட்பட) உபயோகப்படுத்த விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | பொருளின் விவரம் | எண்ணிக்கை | கதிரேசன், அயோத்தியம்மன் கோரியில் தெரு, அனகாபுத்தூர், சென்னை – 70. | பாலச்சந்திரன் 42, அண்ணாதுரை தெரு, அனகாபுத்தூர், சென்னை 70. | இளம்பருதி 56, திருநீர்மலை 2வது தெரு, அனகாபுத்தூர், சென்னை 70. |
|---|---|---|---|---|---|
| 1 | ஆட்டோ(ஓட்டுநர் ஊதியம், எரிபொருள், ஒலிபெருக்கி மற்றும் ஆம்பிளிபையர் உட்பட) | 1 | ரூ.2,800/– | ரூ,2,500/– | ரூ.2,700/– |

<u>அலுவலக குறிப்பு.</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

1. வசூல் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.6</u>

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகனங்களின் பழுதுகளை நீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு :** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.7</u>

அனகாபுத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு 2019–2020ம் ஆண்டிற்கு சாலை வரிகள் மற்றும் காப்பீட்டு தொகை செலுத்த வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.8</u>

அனகாபுத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு தகுதி சான்று பெற ஏற்படும் பழுது பணிகளை நீக்கவும், உருளி மற்றும் சிறு பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.9</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு **2019–2020ம்** ஆண்டிற்கு சாலை வரிகள் மற்றும் காப்பீட்டு தொகை செலுத்த வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் ரூ.**4.00** இலட்சத்திற்கு நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.10</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பபட்ட கீழ்க்கண்ட பணிகளை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| **1.** | லெமன் கிராஷ் கிருமிநாசினி திரவம் **100** லிட்டர் சப்ளை செய்தல் பணி | **2.80** |
| **2.** | பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களுக்கு காற்று நிரப்ப காற்று அடிக்கும் இயந்திரம் மற்றும் பசுமை உரக்குடில் அமைப்பு (ம) பாதை வரைபடம் சப்ளை செய்தல் பணி | **1.55** |
| **3.** | பொது சுகாதார பிரிவில் உள்ள பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களில் கழிவு பிரித்தல் (Waste Segregation) விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டு நிறுவுதல் பணி | **1.30** |
| **4.** | பசுமை உரக்குடிலில் உள்ள எரியூட்டப்பட தகுதியான கழிவுகளை அரியலூர் மாவட்ட சிமெண்ட் நிறுவனத்திற்கு பேக்கிங் செய்து அனுப்ப தேவையான பொருட்கள் சப்ளை செய்தல் பணி | **3.00** |
| **5.** | பொது சுகாதார பிரிவில் உள்ள டிராக்டர் (TN 22 3732) வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகளை சரிபார்த்தல் பணி | **0.80** |
| **6.** | பொது சுகாதார பிரிவில் உள்ள குப்பை லாரி (TN 22 AU 2976) வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகளை சரிபார்த்து தகுதிச் சான்று பெறுதல் பணி | **1.70** |

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.11</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகனங்களின் பழுதுகளை நீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.**5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.12</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பபட்ட கீழ்க்கண்ட பணிகளை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி குடிநீர் வாகனம் டிஎன் 22 ஏஎல் 5349 பழுது பார்த்து பணி மேற்கொண்டு தகுதி சான்று பெறுதல் பணி | 1.50 |
| 2. | சமுதாய நலக்கூடத்தில் உணவு அருந்தும் அறைக்கு தேவையான மேசை மற்றும் நாற்காலி சப்ளை செய்தல் பணி | 6.00 |
| 3. | அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2,7 மற்றும் 13ல் 4 எண்ணம் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசை மோட்டார் அமைத்தல் பணி | 10.00 |
| 4. | அன்னை மேரி தெரு, அண்ணா நகர் முதல் பிரதான சாலை, பஜார் தெரு, தேவராஜ் நகர் விரிவு மற்றும் வெங்கடேஸ்வரா நகர் 4வது தெரு 1வது லேன் வடிகால் பழுது பார்த்தல் பணி | 3.00 |

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.13</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள 21 துப்புரவு பணியாளர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. துப்புரவு மேற்பார்வைாளர் பணியிடம் ஒன்று, துப்புரவு ஆய்வர் பணியிடம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 120 நபர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 2016–17, 2017–18ம் ஆண்டு முடிவுபெற்று, 2018–19 மூன்றாம் ஆண்டு பணி நடைபெற்று வருகிறது. அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ல், அளவுகோலின்படி 198 துப்புரவு பணியாளர்கள் தேவையாக உள்ளது. ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட 21 பணியிடங்களில் 1 துப்புரவு பணியாளர் மாற்றலாகி சென்றார் மற்றும் 1 துப்புரவு பணியாளர் இறந்து விட்டதால் 19 துப்புரவு பணியாளர்களே உள்ளனர். ஆகையால் 19 மற்றும் 120 ஒப்பந்த பணியாளர்கள் போக கூடுதலாக 59 துப்புரவு பணியிடங்கள் தேவைப்படுகிறது.

எனவே, பொது சுகாதார பணிகளையும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளையும் சிறப்பாக செயல்படுத்திட ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 21 பணியிடங்களில் 1 துப்புரவு பணியாளர் மாற்றலாகி சென்றார் மற்றும் 1 துப்புரவு பணியாளர் இறந்து விட்டதால் 19 துப்புரவு பணியாளர்களை தவிர்த்து, 179 பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் 2019–20ம் ஆண்டிற்கு தனியார் மூலம் (On Outsourcing Basis) நிரப்பவும் அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, 20 துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். இந்நகராட்சியில் இது நாள் வரை ஒரு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக துப்புரவு பணியாளர்களின் பணியினை மேற்பார்வை செய்ய இயலவில்லை. எனவே, ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட

பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்க அனுமதி கோரப்பட்டுள்ள பணியிடங்களை சேர்த்து, 179 துப்புரவு பணியாளர்கள் மற்றும் இவர்களது பணியினை மேற்பார்வை செய்ய 9 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே 179 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 9 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் (டீ ரே டீரவளடிரசஉைபே கூயளளை) நிரப்ப நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பட்டது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கே.டிஸ்.எண்.32976/ஜே3/2018 நாள்.11.01.2019ல் 198 துப்புரவு பணியாளர்களில் நகராட்சியில் பணிருரிந்து வரும் 19 நிரந்தர பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 179 இடங்கள் On Outsourcing மூலம் நிரப்ப நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணி உத்திரவு வழங்கும் வரை, ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வந்த மெசஸ்.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் (பி) லிட் நிறுவனத்திற்கு கடந்தாண்டு வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை தொடர்ந்து செய்ய கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு :</u> பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியளிக்கலாம்.

1. மேற்கண்ட பணிக்கு புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரை, ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வந்த மெசஸ்.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் (பி) லிட் நிறுவனத்திற்கு கடந்தாண்டு வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை தொடர்ந்து செய்ய கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.14</u>

11.01.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள சோலார் கூரைக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 1.20 | மெசஸ்.1ஜிபிபிஎஸ் ஐடி சொலுசியன்ஸ்<br>மெசஸ்.டிஜே எண்டர்பிரைசஸ் | 0.10 %குறைவு<br>1.20 %அதிகம் |
| 2. | வார்டு எண்17ல் உள்ள உயர் கோபுர மின் விளக்கினை வார்டு எண்.15ல் பசுமை உரக்குடில் அருகில் மாற்றி மற்றும் எல்.இ.டி விளக்குகள் பொருத்துதல் பணி | 1.10 | மெசஸ்.மாடர்ன் எலக்ட்ரிகல்ஸ்<br>மெசஸ்.மகாலட்சுமி எண்டர்பிரைசஸ் | 0.05 %றைவு<br>1.25 %அதிகம் |
| 3. | நகராட்சி பகுதியில் உள்ள தெரு விளக்குகளுக்கு 20 எண்ணம் டைமர் ஆன் / ஆப் சுவீட்ச் | 2.50 | மெசஸ்.மாடர்ன் எலக்ட்ரிகல்ஸ்<br>மெசஸ்.மகாலட்சுமி | 0.10 %குறைவு<br>1.20 %அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொருத்ததுல் பணி | | எண்டர்பிரைசஸ் | |
| 4. | நகராட்சி உரக்கிடங்கில் குப்பை தரம் பிரித்தல் பணி (Bio Mining) மேற்கொள்ள 50 KVA மின் இணைப்பு பெறுதல் பணி | 4.00 | மெசஸ்.மாடர்ன் எலக்ட்ரிகல்ஸ்<br>மெசஸ்.மகாலட்சுமி எண்டர்பிரைசஸ் | 0.05 %குறைவு<br>1.25 %அதிகம் |
| 5. | கௌரி அவென்யூ மற்றும் லஷ்மி நகர் பகுதிகளில் (கூடுதலாக) குப்பைகள் உருவாகும் இடத்தில் உரம் தயாரித்தல் பணி (Onsite Compost Centre) | 3.00 | வி.குணளன்<br>டிகே இன்டஸ்ட்ரிஸ் | 0.10 %குறைவு<br>1.50 %அதிகம் |
| 6. | வார்டு எண்.4 அண்ணா தெருவில் சிறுபாலம் மற்றும் விடுபட்ட பகுதிகளில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 3.25 | ஜி.சுரேஷ்<br>எம்.நித்தியானந்தம் | 0.15 %குறைவு<br>1.20 %அதிகம் |
| 7. | பம்ப் அவுஸ் சாலையில் அமைந்துள்ள நியாய விலை கட்டிடத்தினை சுற்றி சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 4.20 | எம்.ஆஷா<br>ஏ.சுசீலா | 0.10 %குறைவு<br>1.30 %அதிகம் |
| 8. | வார்டு எண்.9 பஜார் தெருவில் அமைந்துள்ள ஆடு அறுக்கும் கூடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் மராமத்து பணி மேற்கொள்ளுதல் | 4.00 | டிகே இன்டஸ்ட்ரிஸ்<br>வி.குணளன் | 0.10 %குறைவு<br>1.40 %அதிகம் |

<u>அலுவலக குறிப்பு :</u> குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி.